DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.343/2021**
Deposition of Witness for – Prosecution : PW2
Defence:

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஜேசிங் | | : |
| த/பெ | : சுபாகரன் | மதம் | : |
| கிராமம் | : ரெட்ஹில்ஸ் | தொழில் | : Deputy Manager |
| வட்டம் | : சென்னை | வயது | : 32/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 27.03.2026**

**முதல் விசாரணை: PW2**

நான் துணை மேலாளராக சிட்டி யூனியன் வங்கி ரெட்ஹில்ஸ் கிளையில் கடந்த 1 மாத காலமாக வேலை பார்த்து வருகிறேன். இந்நீதிமன்றத்தில் இருந்து கிடைத்த அழைப்பாணையின் பேரில் சாட்சியளிக்க வந்துள்ளேன். எனது வங்கியில் வழங்கிய அடையாள அட்டை பார்த்து உறுதி செய்யப்பட்டது. Sanmuga Export and Import நிறுவனம் எங்கள் வங்கியின் ரெட்ஹில்ஸ் கிளையில் கணக்கு வைத்துள்ளது அதன் 02.01.2021 முதல் 29.12.2021 வரையிலான Statement of Accounts ஆவணத்தின் கோரியதின் பேரில் எடுத்து வந்துள்ளேன். அந்த ஆவணம் **(பு.சா.ஆ.9)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதே நிறுவனத்தின் Monthly Maintenance charges குறித்த அறிக்கை 24.04.2021 முதல் 29.12.2021 வரையில் தாக்கல் செய்துள்ளேன். அந்த ஆவணம் **(பு.சா.ஆ.9)** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்நாள் வரையில் மேற்படி நிறுவனத்தின் வங்கி கணக்கு செயல்பாட்டில் தான் உள்ளது. வங்கி கணக்கில் பரிவர்த்தனை ஏதும் நடக்கவில்லை ஆனால் Account active ல் தான் உள்ளது.

குறுக்கு விசாரணை

இவ்வழக்கு தொடர்பான சங்கதி எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொதுவாக காசோலை வங்கி செலுத்தும் போது குறிப்பிட்ட தொகைக்கு மேல் காசோலை செலுத்தினால் அதற்காக தகவல் தெரிவிக்கப்படுமா என்றால் பொதுவாக காசோலை வங்கியில் செலுத்தினாலே தெரிவிக்கப்படும். 26.08.2021 ஆம் தேதி எங்கள் வங்கி கிளை மேலாளர் பணியில் இருந்தாரா என்றால் அதை குறித்து ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். தற்பொழுது வங்கி கிளை மேலாளர் அந்த தேதி பணியில் இருந்தாரா என்பதற்கு பதிவேடு என் வசம் இல்லை, வங்கியில் தான் இருக்கும். காசோலையில் Over writting செய்யப்பட்டிருந்தால் அந்த காசோலை பணமாக்கப்படாது என்றால் சரிதான். அவ்வாறு காசோலையில் Over writing செய்யப்பட்டிருந்தால் எந்த காரணத்திற்காக காசோலை திருப்பப்படும் என்றால் Alternate correction என்ற காரணத்திற்காக திருப்பப்படும். காசோலையில் எழுத்திற்கும் தொகைக்கும் வேறுபாடு காணப்பட்டால் அது எந்த காரணத்திற்காக திருப்பப்படும் என்றால் Amount and Word difference என்று திருப்பப்படும். வழக்கு காசோலை Over writing இரண்டு முறை எழுதியதாக காணப்படுகிறது என்றால் அதை குறித்து என்னால் சொல்ல இயலாது. காசோலையில் ரூ.17,50,000/- த்தில் 17 பெரிதாக எழுதியுள்ளதாகவும், 50,000/- என்பது சிறிய எழுத்தாக எழுதப்பட்டுள்ளது என்று வங்கி துணை மேலாளரிடம் கேள்வி எழுப்பப்பட்டது அவர் Signature Expert இல்லை என்பதால் அக்கேள்வி வழக்கில் அவரை கேட்க அவசியமில்லை என்று தெரிவிக்கப்பட்டது. பகுதி தொகை பெற்றிருந்தால் பாக்கி தொகை மட்டும் பெற வேண்டும் என்ற நிலையில் பகுதி தொகை பெற்றதாக காசோலையின் பின் புறத்தில் எழுதப்பட்டிருந்தால் பாக்கி தொகைக்கு

மட்டும் காசோலை பெறப்படுமா என்றால் காசோலையில் காணப்பட்டுள்ள தொகைக்கு தான் பணமாக்கப்படும். காசோலையில் Over writing மற்றும் Numerical Difference இருக்கும் பொழுது refer to drawer என்ற காரணத்திற்கு காசோலை திருப்பப்பட்டிருக்க வேண்டும் ஆனால் போதி பணமில்லை என்று திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார்தாரர் உடன் உள்ள நல்ல உறவினால் காசோலையில் Over writing மற்றும் Numerical Difference இருக்கும் பொழுது refer to drawer என்று போடாமல் போதிய பணமில்லை என்று திருப்பப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K